விடை:

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

கடந்த 28-11-1992-ஆம் தேதி பகல் 12-30 மணிக்கும் 16-40 மணிக்கும் இடையில் சந்தேகத்திற்கு இடமான இரண்டு இளம் நபர்கள் நாகப்பட்டினம் அருள்மிகு நீலாயதாட்சி அம்மன் ஆலயத்திற்குள் சாமி தரிசனம் செய்வது போல் உள்ளே நுழைந்து பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த அறையின் பூட்டிய கதவின் பூட்டை உடைத்து சுமார் ரூ. 90,000 மதிப்புள்ள கோமேதலிங்கம் மற்றும் படிகலிங்கத்தை திருடிச் சென்றுள்ளார்கள். இவ்வழக்கு நாகப்பட்டினம் காவல் நிலைய குற்ற எண் 930/92, பிரிவு 454 மற்றும் 280 இந்திய தண்டனைச் சட்டப்படி வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு, 8-3-95-ல் பொருளாதாரக் குற்றப்பிரிவுக்கு (சிலை பிரிவு) மாற்றப்பட்டு, தற்போது அப்பிரிவின் விசாரணையில் உள்ளது. மேலும், இவ்வழக்கின் விசாரணைக்கு உதவியாக கைரேகை நிபுணர்கள், டாக்ஸ்குவாடு இவைகளை உபயோகப்படுத்தி பார்த்ததிலும் எந்தவித உபயோகமான தகவலும் கிடைக்கவில்லை. சிலைத் திருட்டு வழக்குகளில் சம்பந்தப்பட்டு தலைமறைவாகி இருக்கும் இளங்குற்றவாளிகள் வந்து செல்லும் இடங்களை கண்காணிக்க காவல் துறையினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2--

மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகத்திற்கு தமிழக அரசின் ஒதுக்கீட்டுத் தொகை

வினா எண் 32--**திரு. அ.லெ. சுப்பிரமணியன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் அபிஷேகம் பட்டியில் உள்ள மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகத்திற்கு, இதுவரை தமிழக அரசு ஒதுக்கீடு செய்த தொகை எவ்வளவு?

(ஆ) இப்பல்கலைக் கழகத்தில் கட்டடங்கள் கட்டவும், குடியிருப்புகள் அமைக்கவும், புதிய துறைகள் துவங்கவும் நிதி வழங்கிட அரசு முன்வருமா?

1996 ஆகஸ்ட் 20]

விடை:

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:

(அ) மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தினை பராமரிக்கும் செலவுகளுக்காக 1990-91ம் ஆண்டுக்கு ரூ. 40 லட்சமும், அதன் பின்னர் ஆண்டுக்கு ரூ. 50 இலட்சம் என மானியமும் (Block Grant) *நிர்ணயம் செய்யப்பட்டு இதுவரை அரசு ரூ. 290 இலட்சம் வழங்கியுள்ளது.*

(ஆ) இப்பல்கலைக் கழகத்திற்குக் கட்டடங்கள் கட்டுவதற்காகவும், சாலைகள், கழிப்பறைகள் கட்டுவதற்காகவும், பேருந்துகள் வாங்குவதற்காகவும், புதிய துறைகள் துவங்குவதற்காகவும், புத்தகங்கள் உபகரணங்கள் வாங்குவதற்காகவும் அரசு இதுவரை மொத்தம் ரூ. 384.03 இலட்சத்தை வழங்கியுள்ளது.

3--

மாவட்டங்களில் விளையாட்டு அரங்கம் கட்டுதல்

*வினா எண் 515--***திரு. செங்கை சிவம்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--*

(அ) அனைத்து மாவட்டங்களிலும், விளையாட்டு அரங்கம் (ஸ்டேடியம்) கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை:

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) விளையாட்டரங்கம் கட்டப்படாத மாவட்டங்களில் விளையாட்டரங்கம் கட்ட வேண்டி மாவட்ட ஆட்சியர் மூலம் அதற்குரிய இடம் தேர்வு செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இடம் தேர்வு செய்யப்பட்ட பின்பு, விளையாட்டரங்கம் கட்டுவதற்கான கருத்துருக்கள் மைய அரசிற்கு அனுப்பி மைய அரசின் நிதி உதவி பெறப்பட்ட பின்பு விளையாட்டரங்க கட்டுமானப் பணி மாநில அரசின் நிதியுதவியுடன் துவங்கப்படும்.

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS